02.09.2025

அ.வ.எண். 1075/2017

வா.சா.1 - முனியப்பன் த/பெ. முத்துசாமி

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 02.09.2025 is accordance with the provision of Act X of 3331

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியும். இந்த வழக்கை எனது தாயார் ராமாயி தாக்கல் செய்தார், பின்னிட்டு நாங்கள் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளோம். என் தாயார் ராமாயி இறந்துவிட்டார். என் தாயாருக்கு நான்கு வாரிசுகள் அவர்கள் 1. முனியப்பன் ஆகிய நானும், 2. ரங்கம்மாள், 3. வீரம்மாள், 4. முருகம்மாள் ஆவோம். இதில் வீரம்மாள் இறந்துவிட்டார். வீரம்மாளின் வாரிசுகளை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான், அவர்கள் எங்கு உள்ளார்கள் என்று தெரியாது.

2. வா.சா.ஆ.1 ஆவணம் மூலம் வழக்கு சொத்தை எனது தகப்பனார் 27.06.1979 தேதியில் கிரயம் பெற்றார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கிரய பத்திரத்தில் சூலூர், மதியழகன் நகர், 43 நம்பர் நிலத்தில் வசிக்கும் வீராச்சாமி மகன் கூலி வேலை முத்துசாமிக்கு என கண்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கிரய ஆவணத்தில் கே.வி.முத்துசாமி என இல்லை என்றால் சரிதான். முத்துசாமி எனவும், கே.வி.முத்துசாமி எனவும் போடுவார். வா.சா.ஆ.1 கிரய ஆவணம் தாக்கல் செய்பவர் என குறிப்பிட்டுள்ளதில் முத்துசாமி என மட்டும் கையொப்பம் இடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. வா.சா.ஆ.1 கிரய ஆவணத்தில் கண்ட சொத்து என் தகப்பனாரின் சுய சம்பாத்திய சொத்து ஆகும். பத்திரம் வாங்கியவர் என்ற இடத்தில் முத்துசாமி என மட்டும் கையொப்பம் செய்துள்ளார் என்றும், கே.வி. முத்துசாமி என்று இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தின் மூலமாக என் தகப்பனார், வள்ளியம்மாளிடம் இருந்து கிரயம் பெற்றார் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தில் கண்ட சொத்து வழக்கு சொத்திற்கு மேல்புறமாக உள்ள சொத்து என்றால் சரிதான். 28.05.1979 தேதியில் என் தகப்பனார், வள்ளியம்மாளிடம் இருந்து

கிரயம் பெற்றார் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தில் சூலூர், மதியழகன் நகர், 43 நம்பர் இல்லத்தில் வசிக்கும் வீராச்சாமி மகன் கூலி வேலை முத்துசாமி என மட்டும் உள்ளது என்றும், கே.வி.முத்துசாமி என்று இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தில் தாக்கல் செய்தவர் கையொப்பம் முத்துசாமி என உள்ளது என்றும், கே.வி.முத்துசாமி என்று இல்லை என்றால் சரிதான்.

4. வா.சா.ஆ.6 ஆவணம் என் தகப்பனார், புஷ்பாவுக்கு கிரயம் கொடுத்த பத்திரம் என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.6 ஆவணத்தில் வீராச்சாமி மகன் முத்துசாமி என மட்டும் உள்ளது என்றும், கே.வி.முத்துசாமி என்று இல்லை என்றால் சரிதான். ஆனால் என் தகப்பனார் கையொப்பம் செய்யவில்லை. வா.சா.ஆ.6 ஆவணத்தில் தாக்கல் செய்தவர் கையொப்பம் முத்துசாமி என உள்ளது என்றும், கே.வி.முத்துசாமி என்று இல்லை என்றால் சரிதான். ஆனால் என் தகப்பனாரின் கையொப்பம் அல்ல. வா.சா.ஆ.1, 3 மற்றும் 6 ஆவணங்களிலும், என் தகப்பனார் முத்துசாமி தான் கையொப்பம் செய்து தாக்கல் செய்துள்ளார் என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5. என் தகப்பனார் சுய சம்பாத்திய சொத்தை வா.சா.ஆ.6 ஆவணம் மூலமாக கிரயம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. என் தகப்பனார் நேரடியாக சூலூர் சார் பதிவாளர் அலுவலகம் வந்து மேற்படி ஆவணங்களில் கையொப்பம் மற்றும் கைரேகை செய்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி கிரயத்திற்கு ஆதரவாக என் தகப்பனார் சாட்சிகள் முன்னிலையில் தகுந்த மறுபயன் பெற்றுகொண்டார் என்றால் சரியல்ல. கிரயத்தன்றே பிரதிவாதிக்கு சுவாதீனம் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. என் தகப்பனார் கிரயத்தன்று வரவே இல்லை.

6. வா.சா.ஆ.6 கிரய ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கிரய ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்யாததால் என் தகப்பனார் கிரயத்திற்கு வந்தாரா என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. பிரதிவாதி கிரயம் பெற்ற வருவாய் ஆவணங்களில் தனது பெயரை சேர்த்துள்ளார் என்றால் சரியல்ல, என் தகப்பனார் பெயரிலும், எங்கள் பெயரிலும் பட்டா உள்ளது. மேற்படி பட்டாவை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் கொடுத்திருப்பேன்.

நான் அவ்வாறு பட்டாவை தாக்கல் செய்யவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7. 15.09.2014 தேதியில் பிரதிவாதியின் கணவரும், பிரதிவாதியும் வந்து தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்த பிறகு தான் நான் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தேன் என்று சொல்லியுள்ளேன் என்றும், புகார் நகலை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் அவ்வாறு புகார் கொடுக்கவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் தகப்பனார் 2007 ல் இறந்துவிட்டார். என் தகப்பனார் 1992 ல் கிரயம் கொடுத்தது முதல் என் தகப்பனார் இறக்கும் வரை கிரயம் சம்மந்தமாக புகாரோ அல்லது வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சொத்தின் சுவாதீனம் எங்களிடம் தான் இருந்தது. அதனால் புகார் எதுவும் கொடுக்கவில்லை.

8. பிரதிவாதியின் கணவர் வழக்கு சொத்தில் 2009 ம் ஆண்டு வீடு கட்டுவதற்காக அஸ்திவாரம் போட்டு, தண்ணீர் தொட்டிக்கான குழி மற்றும் இரும்பு ஷெட் அமைத்துள்ளார் என்றால் HOLLOW BLOCK கல்லை வைத்து கட்டி ஷெட் அமைத்தனர், அப்போது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். பிரதிவாதியின் கணவர் சதாசிவம் உயிருடன் இருந்தவரை சொத்து சம்மந்தமாக எவ்வித புகாரோ அல்லது வழக்கோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சதாசிவம் உயிருடன் இருக்கும்போது கோவை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தேன். சதாசிவம் இறந்த பின்னிட்டு தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும், தற்போது சதாசிவம் உயிருடன் இருந்தபோது வழக்கு தாக்கல் செய்தததாக சொல்வது தவறு என்றால் சரியல்ல.

9. வா.சா.ஆ.9 ஆவணத்தில் கே.வி.முத்துசாமி த/பெ.வீராச்சாமி பாலக்காடு ரோடு, மதுக்கரை போஸ்ட், கோவை என்று உள்ளது என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.9 ஆவணத்தை பரிசீலனை செய்ததில் கே.வி.முத்துசாமி த/பெ.வீராச்சாமி பாலக்காடு ரோடு, மதுக்கரை போஸ்ட், கோவை என்று உள்ளது. வா.சா.ஆ.7 ரசீது ஆவணத்தில், கே.வி.முத்துசாமி என மட்டும் உள்ளது என்றும், என் தகப்பனார் பெயரோ அல்லது முகவரியோ எதுவும் இல்லை என்றால் சரிதான். என் தகப்பனார் சுய

சம்பாத்திய சொத்தை வா.சா.ஆ.6 ஆவணம் மூலமாக தகுந்த மறுபயன் பெற்றுக்கொண்டு பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்தார் என்றும், தற்போது நாங்கள் மேற்படி கிரய பத்திரம் செல்லாது என்று பொய்யாக வழக்காடி வருகிறோம் என்றால் சரியல்ல. என் தகப்பனார் எழுதி தரவில்லை. 1992 ம் ஆண்டு முதல் தாவா சொத்து பிரதிவாதியின் சுவாதீனத்தில் உள்ளது என்றும், நாங்கள் மேற்படி தாவா சொத்தை ஒட்டி மேல்புறம் உள்ள காரணத்தினால் எங்களுடைய சுவாதீனத்தில் வழக்கு சொத்து உள்ளது என்று பெய்யாக வழக்காடி வருகிறோம் என்றால் சரியல்ல. வருவாய் துறை ஆவணங்கள் பிரதிவாதியின் பெயரில் உள்ளது என்றும், அதை மறைத்து வழக்காடி வருகிறோம் என்றால் சரியல்ல. 1992 ம் வருடம் கிரயம் பெற்றது முதல் தாவா சொத்தில் பிரதிவாதி தான் முழுமையான உரிமையாளர் என்பது தெரியும் என்றும், தற்போது 2014 ஆண்டில் தான் தெரியும் என்று பொய்யாக வழக்காடி வருகிறேன் என்றால் சரியல்ல.

10. கிரயம் பெற்று 22 ஆண்டுகள் கழித்து இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வழக்கு காலதாமத தடை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனவே, நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றும், வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur